**அம்பலங்கொட பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரில் 06 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 17 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து அம்பலங்கொட பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலுவை குத்தகை அறவீடு செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு முடிவடையாதிருந்த போதிலும் வாராந்த சந்தையின் குத்தகைத் தொகை ரூபா 500,555 தொகை மற்றும் ஏனைய நிலுவை குத்தகைத் தொகை ரூபா 278,780 தொகை திரண்ட நிதியத்திலிருந்து பதிவளிக்கப்பட்டிருந்தது. | முறையான அங்கீகாரம் காணப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் செய்திருக்கவில்லை. | ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 04 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசத்தை இணக்கஞ் செய்து | நீண்ட காலமாக காணப்படும் சமமின்மைகளை சரி செய்வதற்கு |

| | | |
|---|---|---|
| தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் / அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 4,889,885 இற்கான வித்தியாசம் ஒன்று காட்டப்பட்டது. | கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

**1.3.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 206,210,723 தொகைக்கான 07 கணக்கு விடயங்களுக்குரிய தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் பிரிவு 134(1) | அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்கள் என வெளியிடப்பட்ட பகுதிகளில் இருந்து வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரிவுகளின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கைகள் | | | |
| (i) 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/பபகோ/2010/01 இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 05 | கடையறைகளுக்கான வாடகை உடன்படிக்கைகள் 03 வருடாங்களுக்கு ஒருமுறை நாளதுவரை ஆக்கப்பட்டு திருத்துவற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) பந்தி 06 | 05 வருடங்களுக்கு ஒருமுறை கடையறைகளுக்கான வாடகைத் தொகை புதிய பெறுமதி மதிப்பீட்டொன்றின் மூலம் திருத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) நிதிப் பிரமாணம் 570,571 மற்றும் 572 | 02 வருட காலத்தை மிகைத்துள்ள 47 வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) நிதிப் பிரமாணங்கள் 1645 மற்றும் 1646 | சபைக்குச் சொந்தமான வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்புக்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,866,340 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,316,879 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2019 மதிப்பீட்டு வருமானம் | 2019 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2019 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பீட்டு வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்க ப்பட்ட வருமானம | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 1,000 | 17,215 | 2,297 | 257,726 | 8,850 | 17,115 | 3,517 | 242,147 |
| வாடகை | 2,500,000 | 2,173,738 | 1,529,025 | 1,004,659 | 2,320,350 | 2,698,883 | 3,003,751 | 363,882 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,331,000 | 1,287,440 | 1,148,310 | 564,600 | 1,380,300 | 1,479,240 | 958,730 | 553,910 |
| | 3,832,000 | 3,478,393 | 2,679,632 | 1,826,985 | 3,709,500 | 4,195,238 | 3,965,998 | 1,159,939 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 6,269,491 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 50,115,698 தொகை பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

## (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்ட துணை விதிகளின் படி சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய செய்பணிகளுக்காக மீளாய்வாண்டிற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## (ஆ) எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | படபொல இரண்டு மாடி வர்த்தகக் கட்டடத் தொகுதியில் 14 கடையறைகள் 1997 ஆண்டு முதல் சபைத் தீர்மானம் ஒன்றின் மூலம் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. 2013 மற்றும் 2015 ஆண்டுகளின் போது பெறுமதி மதிப்பீடு திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த பெறுமதி மதிப்பீட்டுக்கு கடை உரிமையாளர்கள் எதிர்ப்புக் காட்டியமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 596,400 ற்கான வருமானம் ஒன்றினை இழந்துள்ளது. | பெறுமதி மதிப்பீட்டை செயற்படுத்த வேண்டும். | நிலுவைத் தொகையை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |
| (ii) | மீடியாகொட வர்த்தக கட்டடத்தொகுதியின் கடையறைகள் 2015 ஆண்டு முதல் வாடகை அடிப்படையில் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் கடையறைகளுக்காக புதிதாக பெறுமதி மதிப்பீடு பெற்றுக்கொள்ளல் மற்றும் 03 வருடங்களுக்கு ஒருமுறை வாடகை உடன்படிக்கையை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் உழைக்கக் கூடிய வருமானம் ஒன்றை இழந்துள்ளது. | வருமானத்தை சரியாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### (இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தெல்கஹபெத்த சேதனப் பசளை உற்பத்தி செயற்களத்தில் பொறுத்தப்பட்டிருந்த குப்பை அறைக்கும் இயந்திரம் செயலிழந்து இருந்த காரணத்தினால் குப்பை செயற்களத்தில் உக்கக்கூடிய குப்பைகள் குவிந்து காணப்பட்டன. மழை நாட்களில் இந்த கழிவுப் பொருட்கள் பக்கத்தில் இருக்கும் வயல் நிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவது தொடர்பாக முறையான நடவடிக்கை எதுவும் எடுத்திருக்கவில்லை. | குப்பைகளை அப்புறப்படுத்துவதற்காக முறையான மற்றும் நீண்ட காலத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | குப்பை அறைக்கும் இயந்திரம் திருத்தப்படுகின்றது என அறிவிக்கின்றேன். |

### (ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்திக்கான நீண்ட காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தின் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கப்படும் என அறிவிக்கின்றேன். |

## 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொது மயானத்தை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், திலகபுர மற்றும் நிந்தான மயான வளவில் அங்கீகாரமற்ற வதிவோர்கள் நிரந்தர வீடுகள் கட்டி வசித்து வருகின்றனர். | பொது மயானங்களின் உரிமையை முறைப்படி பெற்றுக்கொள்ள வேண்டும். | மயானங்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| 14 பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் 14 மிகைப்பதவிகளை, அமைய மற்றும் பிரதியீட்டு 15 பதவிகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்களை முறைப்படி நிரப்புவதற்கும் மிகைப் பதவிகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க்பட வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| ஓய்வு பெற்ற, வெளிநாடுகளுக்கு சென்றுள்ள, சேவையை விட்டுச் சென்றுள்ள மற்றும் இறந்துள்ள 11 ஊழியர்களிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த ஊளியர் கடன் மீதி ரூபா 195,900 தொகை ஆகும். | நிலுவை மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைக் கடன் மீதியை எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது போதிளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் அனுப்ப நடவடிக்கை எடுப்பேன். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |